ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2020 மார்ச் 17 |

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2020 பெப்புருவரி

**கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 53.6**

2020 சனவரியுடன் ஒப்பிடுகையில் 0.4 சுட்டெண் புள்ளிகள் கொண்ட குறைவு

2020 பெப்புருவரியில் தயாரிப்புக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் மெதுவான வேகத்தில் அதிகரித்து 53.6 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தமைக்கு கொரோனா (கொவிட்-19) வைரஸின் நோய்ப் பரவலின் காரணமாக புதிய கட்டளைகளிலும் தொழில்நிலையில் விரிவாக்கத்தில் வேகம் குறைந்த அதேவேளை, அடுத்த மூன்று மாதங்களுக்கான எதிர்பார்க்கைகள் கணிசமாகக் குறைவடைந்தமை முக்கிய காரணமாக அமைந்தது.

உலகளாவிய கேள்வி குறைவடைந்தமையினால் புதிய கட்டளைகள் மற்றும் தொழில்நிலை குறிப்பாக, புடவை மற்றும் அணியும் ஆடை துறைகளின் தயாரித்தல் துறையில் மெதுவடைந்தது. மேலும், புடவை மற்றும் அணியும் ஆடைத் துறையிலுள்ள பல பதிலிறுப்பாளர்கள், கொரோனா வைரஸ் பரம்பலிலிருந்து தோன்றிய வழங்கல் பக்கப் பிரச்சனைகளின் காரணமாக அவர்களது மூலப்பொருள் இறக்குமதிகள் தாமதமடைந்தன என எடுத்துக்காட்டினர். அதற்கமைய, நிரம்பலர் விநியோக நேரம் கொரோனா வைரஸ் (கொவிட்-19) நோய்ப் பரம்பலுக்குப் பதிலிறுத்தி கப்பற்சரக்குகளின் தாமதம் காரணமாக பெப்புருவரி மாதக் காலப்பகுதியில் மேலும் விரிவடைந்து ஒட்டுமொத்தச் சுட்டெண்ணில் அதிகரிப்பினைத் தோற்றுவித்தது.


அதேவேளை, குறிப்பாக உணவு மற்றும் குடிபானத் துறையில் உற்பத்தி மற்றும் கொள்வனவு இருப்பு என்பனவற்றில் சிறியளவு அதிகரிப்பானது எதிர்வருகின்ற பருவகாலக் கேள்வியினை நிறைவு செய்வதற்கான தயார்ப்படுத்தலில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

தொழில் நிலை தவிர்ந்த, கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பின் அனைத்துத் துணைச் சுட்டெண்களும் 2020 பெப்புருவரி மாத காலப்பகுதியில் தொடக்க மட்டமான 50.0 (நடுநிலையான) அளவினை விஞ்சித் தயாரிப்பு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த விரிவாக்கத்தினை குறைவான வீதமொன்றில் சமிக்ஞைப்படுத்தின.

| மாறி | சன | பெப் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | 54.0 | 53.6 | - | **அதிகரிப்பு, மெதுவான வீதத்தில்** |
| **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | | | |
| புதிய கட்டளைகள் | 54.5 | 51.1 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 54.0 | 54.8 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| தொழில்நிலை | 49.5 | 47.3 | - | சுருக்கமடைகிறது உயர்ந்த வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 50.5 | 52.2 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலாளர்களின் விநியோகிக்கும் நேரம் | 61.5 | 66.1 | + | விரிவடைதல், உயர்ந்த வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொரோனா வைரஸ் நோய்ப் பரம்பல் உலக வழங்கல் சங்கிலிக்கு தடையேற்படுத்துமென தயாரிப்பாளர்கள் விசேடமாக ஆடைத் துறையுடன் தொடர்புபட்டவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரித்தல் நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்க்கைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் கணிசமாக சீர்குலைந்திருந்தது.




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2020 சனவரியிலிருந்து 3.2 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட குறைவொன்றுடன் 2020 பெப்புருவரியில் 47.2 கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது. வழங்கல் சங்கிலிகள் மற்றும் கேள்வியினை கொரோனா வைரஸ் (கொவிட்-19) நோய்ப் பரம்பல் தாக்கியமையினால் இது தசாப்த காலத்தில் துரித சுருக்கமொன்றாகும்

2020 பெப்புருவரியில் சீனாவின் தயாரிப்பு கொ.மு.சு சுருக்கமடைந்து, ஐ.அமெரிக்கா மற்றும் இந்தியா நாடுகளில் வேகம் குறைந்த அதேவேளை ஐக்கிய இராச்சியத்தில் கொ.மு.சு மேம்பட்டதுடன். ருஷியா மற்றும் ஐரோப்பிய வலயம் என்பன எதிர்மறையான பிராந்தியத்தில் காணப்பட்டது.

மூலம்: மார்க்கிட்[1], மார்ச் 16, 2020 இல் உள்ளவாறு

1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.

கொரோனா வைரஸ் (கொவிட்-19) நோய்ப் பரம்பலின் காரணமாக புதிய வியாபார நடவடிக்கை மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட மெதுவான விரிவடைதல் மூலம் துணையளிக்கப்பட்டு 2020 பெப்புருவரியில் பணிகள் துறை விரிவாக்கமானது 2020 சனவரியுடன் ஒப்பிடுகையில் மெதுவடைந்தது.

2020 பெப்புருவரியில் சீனாவிலிருந்து சுற்றுலாப் பயணிகளினதும் கப்பற்சரக்குகளினதும் வருகையில் வீழ்ச்சி காணப்பட்டதனால் கொரோனா வைரஸ் (கொவிட்-19) நோய்ப்பரம்பல் தாக்கத்தின் காரணமாக தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானம், அத்துடன் போக்குவரத்துத் துணைத் துறைகளிலுள்ள வியாபார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தன. மேலும், நிதியியல் பணிகள் மற்றும் தொழில்சார் பணிகள் துணைத் துறைகளும் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. இதன் விளைவாக, பணிகள் துறையில் ஒட்டுமொத்த வியாபார நடவடிக்கை, 2020 பெப்புருவரியில் குறைவான வேகமொன்றில் விரிவடைந்தது. அதேவேளை, புதிய வியாபாரங்களில் விரிவடைதலும் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் அநேகமான துணைத் துறைகள் முழுவதும் வீழ்ச்சியடைந்ததுடன் போக்குவரத்து மற்றும் ஏனைய தனிப்பட்ட பணிகள் துணைத் துறைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி குறிப்பிடத்தக்கதாகவிருந்தது.

நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள், கொரோனா வைரஸ் (கொவிட்-19) உலகளாவிய நோய்த் தொற்றலின் சாத்தியமான தாக்கம் பற்றிய இடரின் காரணமாக பிரதானமாக தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானம் மற்றும் போக்குவரத்துத் துணைத் துறைகள் என்பவற்றில் 2020 பெப்புருவரியில் கணிசமாகத் தளர்வடைந்தது. மேலும், மொத்த மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளில் குறிப்பாக, பன்னாட்டு வர்த்தகம் மற்றும் நிதியியல் பணிகள் நடவடிக்கைகள் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள பதிலிறுப்பாளர்கள் அடுத்த சில மாதங்களில் வீழ்ச்சியொன்றை தாம் எதிர்பார்ப்பதாகச் சுட்டிக்காட்டினர். அதேவேளை, வியாபார நடவடிக்கை மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகளின் தளர்வு தொழில்நிலையில் வீழ்ச்சியினை நோக்கிச் செல்வதற்கு வழிவகுத்தது. இதன் விளைவாக, 2020 பெப்புருவரியில் நிலுவையிலுள்ள பணிகளில் மெதுவான வீழ்ச்சியொன்றிற்கு வழிவகுத்தது.


| மாறி | சன | பெப் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **57.0** | **50.2** | **-** | **அதிகரிப்பு, மெதுவான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 60.4 | 52.7 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 61.4 | 53.8 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 52.5 | 46.2 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| நிலுவையிலுள்ள பணிகள் | 44.1 | 45.8 | + | வீழ்ச்சியடைகின்றது மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 66.5 | 52.7 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**கொ.மு.சு**
சுட்டெண் பெறுமதி
**50.2**

2020 சனவரியுடன் ஒப்பிடுகையில் 6.8 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு

கொரோனா வைரஸ் (கொவிட்-19) பரம்பல் தாக்கத்தின் காரணாக பெப்புருவரியில் 2020 சனவரியில் 52.7 சதவீதத்திலிருந்து 47.1 சதவீதத்திற்கு உலகளாவிய பணிகள் கொ.மு. சுட்டெண் வீழ்ச்சியடைந்து ஏறத்தாழ 11 ஆண்டுகள் குறைவான வாசிப்பொன்றினை பதிவுசெய்தது.

ஐக்கிய அமெரிக்கா, யப்பான், அவுஸ்திரேலியா நாடுகளின் வெளியீட்டின் குறைந்த மட்டங்களுடன் சீனாவில் சுருக்கமொன்றின் மூலமும் இந்த வீழ்ச்சி ஏற்பட்டது. எனினும் ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியா என்பவற்றின் பணிகள் கொ.மு.சு முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 பெப்புருவரியில் அவர்களது பணிகள் துறைகள் மேம்பட்டன என்பதனை எடுத்துக்காட்டின.

(மூலம்: மார்க்கிட்[1], மார்சு 17, 2020 இல் உள்ளவாறு)

***தொழில்நுட்பக் குறிப்பு:***

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.